அண்மைக்காலத்தில், நந்தமிழ் நாடகக்கலைக்கு நற்றொண்டு செய்த மனோன்மணீய ஆசிரியர், ராவ்பகதூர் ப. சுந்தரம் பிள்ளையவர்களை நாம் மறக்க முடியுமா! ராவ்சாகிப் ச. பவானந்தம் பிள்ளையவர்கள் நாடகத்தமிழ்நடை பிறழாது, மொழி பெயர்த்து வெளியிட்ட சாகுந்தலம், அரிச்சந்திரபுராணம், ஒத்தெல்லோ, வெனிஸ்வணிகன் முதலியன புலவர்கள் போற்றுவனவாகும். இவர் புலமையை வெளிப்படுத்த, இவருடைய ஒத்தெல்லோ நாடகத்தின் இறுதி,

"ஒத்தெல்லோ தன் மனைவி உத்தமியைக் கொன்றபின்பு
சித்தமழிந்(து) அழுது, செத்துவிட்ட தத்துவத்தால்
எண்ணித்துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவ(ம்) என்ப திழுக்கு."

காலஞ்சென்ற, வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார் செய்த நாடகங்கள் நாமறிந்தனவாகும். சுந்தரம் பிள்ளையைப் பின்பற்றிக் கற்பனை, கவிநயம், ஆராய்ச்சி முதலியன ஒருங்கமைத்து, "புகழேந்தி நாடகத்தை"த் தமிழ்ப்புலவர், அ. நடராசனார் வெளியிட்டது பாராட்டற் பாலதாகும். உரைநடையில் மொழி பெயர்த்தும், கற்பனை செய்தும் பற்பல நாடகங்களை வெளிப்படுத்திய இற்றைய நாளில் உள்ள ராவ் பகதூர் ப. சம்மந்த முதலியாரவர்கள் நந்தமிழன்னைக்கு நற்றொண்டு செய்து வருகிறார். நாடகக்கலையின் முன்னேற்றமாகிய நன்னோக்கங்கருதித் தாமே நடித்தும் வந்துள்ளார்.

"தமிழகத்தின் காரல் மார்க்ஸ்" என்று காலம் சென்ற திரு. வி.க.வை அழைப்பது போன்று "தமிழகத்தின் பெர்னார்ட் ஷா" என்று போற்றற் குரியவர் எமதருமை நேசர் புதுமை வாசர் பாரதிதாஸர் ஒருவரே யாவர். தாஸரும, மறைந்த மாணிக்கம் ஷாவும் நடிப்புத்திறன் அறிந்தவர்கள்; பகுத்தறிவின் தந்தைகள்; சீர் திருத்தச் செம்மல்கள; பெண்கள் முன்னேற்றத்திற்குப் பெரிதும் பாடுபடுகின்றவர்கள்; இவர்களிடத்து பல ஒற்றுமையுடைய பண்புகளும் காணலாகும். ஷாவின் நாடகங்களை நிழற்பேசும் படத்தில் காண்கிறோம். ஆனால் தாஸர் காதைகள், பாடல் கள, நடித்த நடிப்புகள், உரையாடல்கள் இதுகாறும் நிழற்பேசும் படத்தில் வெளி வராதது வருந்தற் பாலதே. நிற்க.

இசைக்குரிய வர்யர் மொழியெனும் வசைக்கருத்தும், நிறை மொழி மாந்தர் மறைமொழி நடுவிலும் பிறமொழிச் சேர்க்கையும், நாடகத்தமிழை நலியச்செய்கின்றன. பத்தினிக்கு இன்னல் வருவது, பழையபடி தீர்வது இவையையே நாடகம் அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. பண்டை நூலிற் குறித்த பண்களும், இசைகளும கேட்பது குதிரைக்கொம்பே! நாடகக்கலை நலம பெறுவது எக்காலம? நடிப் புத்திறன் நன்கறிவது எக்காலம்? கற்றவர்கள் பிழையற்று நடிப்பது எக்காலம? அதைப் பார்த்துக்களிப்பது எக்காலம்? நாடகத்தில் இலக்கியச் சுவையில்லை! ஆங்கிலத்தில் பிரசங்கம! புனித நாடகக்கலையில் தற்காலத்தில் கட்சிப்பிரசாரத்தைக் கிளப்பி நாடகக்கலைக்கு அழிவு தேடுகின்றனர். ஆயினும, இன்றைக்கு நாடகக் கலை வளர்ச்சி பெற்றிருக்கிறது; நாடகமே உலகமயமாக இருக்கிறது; ஏன்? நாடகக் கலையுடன் விஞ்ஞான அறிவு ஒருங்கு கலக்கப்பட்டு இருப்பதே இதற்குத் தலையாய காரணம் எனலாம்.

டி. சி. கென்ரி, ஐந்தாம் படிவம் 'அ' பிரிவு.

கல்வியும் ஒழுக்கமும்

மாணவர்களாகிய நாம் பள்ளிக்குச் செல்வதன் காரணத்தை வினவினால், 'கல்வி பயிலுதற் பொருட்டே' என்று யாவரும் எளிதில் புகன்றுவிடுவர். ஆனால் பள்ளியானது நமக்குக் கல்வியை மட்டும் போதிப்பதில்லை. ஒழுக்கத்தையும் ஒருங்கே கற்றுக்கொடுக்கின்றது. கல்வி, ஒழுக்கம் இவை இரண்டும் நமக்கு இரு கண்கள் போன்றவை. அவற்றைப் பற்றி ஈண்டு சிறிது ஆராய்வோம்.

கல்வியென்பது கற்கவேண்டிய நூல்களை ஐயந்திரிபறக் கற்றலாம். நாம் மிகவும் இன்றியமையாது கற்கவேண்டியது எண்ணும், எழுத்தும். "எண்ணும் எழுத்தும கண்ணெனத் தகும்" என்றாள் ஔவை மூதாட்டி.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு." என்றார் தெய்வப் புலவர்.

இக்கல்வியினால் அறியாமையாகிய இருள் நீங்கி அறிவு ஒளி வீசுகின்றது. "மடங்கொன்று அறிவ கற்றும் கல்வி" என்று ஆன்றோர் கூறியுள்ளனர். இங்ஙனம் கல்வியால் வளரப்பெற்ற அறிவுடையோர் ஏழையேயாயினும் எல்லாப் பொருளுமுடைய செல்வரேயாவர். கல்வியறிவில்லாதவர் எவ்வளவு செல்வமுடையவராயினும் இறுதியில் ஒன்றும் இல்லாதவரேயாவர்.

"மன்னனில் கற்றோன் சிறந்தவன்", "கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு." என்னும் பழமொழிகள் இதற்குச் சான்றாய் நிற்கின்றன.

கல்வி ஒரு தெவிட்டாத தெள்ளமுது. தித்திக்கும் செந்தேன். அது பருகப் பருக எல்லையற்ற இன்பம் பயக்கும். மணற்பாங்கான கிணற்றில் தோண்டத் தோண்ட நீர் சுரப்பதுபோல, கற்கக் கற்க மக்களின் அறிவு சுடர்விட்டு மிளிரும். இவ்வறிவுச் சுடரே ஒருவர்க்குச் சிறந்த செல்வமாகும். பிற செல்வங்கள் யாவும் செல்வமாகா. வள்ளுவப் பெருந்தகையாரும்,

"கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை." என்று நவின்றுள்ளார்.

இனி ஒழுக்கமானது ஆன்றோர் வகுத்துள்ள முறைப்படி ஒழுகுதலாம். ஒழுக்கம ஒருவருக்கு மேன்மையைக் கொடுக்கின்றது. இம்மைக்கும, மறுமைக்கும் அதுவே துணையாய் நிற்கின்றது. குடிப்பெருமைக்கும் துணையாகி நிற்கின்றது. ஒழுக்கம் தவறி ஒருவன் நடப்பானாகில் அவனுக்கு எப்பொழுதும் சிறப்பு கிடையாது. அவன் அடாத பழியை அடைவான். ஆகையால் நாம நல்லவற்றை வளர்த்து, அல்லவற்றை அறவே நீக்க வேண்டும். மேலும், கல்வி ஒழுக்கம ஆகிய இரண்டில் ஒழுக்கத்தை ஒழித்துக் கல்வியை மட்டும் ஒருவன் பெற்றிருப்பானேயானால், அவன் கல்லாதவனாகவே எண்ணப்படுவான் என்னும் கருத்து செந்நாப் போதர் அருளிய பின்வரும் குறளில் பொதிந்துள்ளது.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்
கல்லார் அறிவிலாதார்."

இதனையே "கல்வி" என்ற அதிகாரத்தில் வேறு ஒருவிதமாக வற்புறுத்துகின்றார் வள்ளுவர்.

"கற்க கசடறக் கற்பவை, கற்றபின்
நிற்க அதற்குத் தக."

கல்வியைக் குற்றமறக் கற்க வேண்டும் என்றும், அவ்வாறு கற்றதை நடைமுறையில் கொண்டு ஒழுகுதல் வேண்டும் என்பதும இதன் கருத்தாகும். எனவே, கல்வி ஒழுக்கம் என்ற இரண்டினையும் கைக்கொண்டு வருங்காலப் பிரஜைகளாகிய நாம் நம் நாட்டின் மேனமையை மேலும் உயர்த்தப் பாடுபடுவோமாக.

ஜி. சுப்புலக்ஷ்மி, (ஐந்தாம் படிவம் 'ஆ' பிரிவு.)

நட்பு

இவ்வுலகில் வாழும் மக்களாகிய நாம் தனித்து வாழ்வதில்லை. அவ்வாறு வாழவும் முடியாது. தனி மனிதன் ஒருவன் சுக வாழ்வு நடத்துவது என்பது கற்பனைக்கும் அப்பாற்பட்டது. நமது வாழ்வு கூட்டுறவு வாழ்வு. நாம் எல்லோரும் ஏதேனும் ஒரு குறிக்காகவாவது பிறர் உதவியை நாடவேண்டியுள்ளது. இவ்வுலகில் உள்ள அனைவரும் நமக்கு உதவிபுரிவதில்லை. ஒரு சிலரே உதவிபுரிவர். அவர்களே நமது நண்பரும் ஆவர். இனி நட்பு என்பது என்ன என்று ஆராய்வோம்.

நட்பாவது உயிர்கள் ஒன்றுக்கொன்று கொள்ளும் மன நெகிழ்ச்சியாகிய உள்ளன்பே ஆகும். இந் நட்பின் தன்மையை விளக்க விரும்பிய வள்ளுவர்,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு"

என நவின்றுள்ளார். ஒருவரைக் கண்டவுடன் முகத்தில் ஏற்படுகின்ற மலர்ச்சி நட்பாகாது. நெஞ்சமும் மலரும்படியாக உள்ளன்புடன் அமைந்ததே நட்பாகும் என்பதே இதன் பொருள் ஆகும். நாம் நட்புக் கொள்பவர் எத்தகையராய் இருத்தல் வேண்டும்? தூய உள்ளம் படைத்தவராகவும், நம் துயரம், மகிழ்ச்சி இவற்றைப் பகிர்ந்து கொள்பவராகவும், துன்பம் வந்தபோது உயிரையும் கொடுத்து உதவி புரிபவராகவும், குணநலம், குடிநலம், நற்சுற்றம் முதலிய நற்குண நற்செயல்கள் பொருந்தப் பெற்றவராகவும், அவச் சொல்லுக்கு அஞ்சி நடப்பவராகவும் இருத்தல் வேண்டும். இப்பண்புகளை உடையவரையே நாம் நாடி நட்புக் கொள்ளவேண்டும். அவ்வாறு ஆராயாது செய்து கொள்ளும் நட்பைப் போல் கெடுதியைப் பயக்க வல்லது வேறொன்றும் இல்லை என்பது உறுதி.

நட்பானது இருவகைப்படும் என்பர் ஆன்றோர். அவற்றுள் ஒருவகை நட்பாவது ஒருவரோடு மனத்தாலும், செயலாலும் ஒருமைப்பட்டுப் பழகுதலாம்.

"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடையாளர் தொடர்பு"

ஒரு நூலைப்படித்து அதில் உள்ள சொல் நயங்களை அறிந்தபிறகு மேன்மேலும் இன்பம் தருவதைப் போல, பழகப்பழக நற்பண்பு உடையவரின் நட்பும் பிறைச் சந்திரனைப் போல் வளர்ந்து இன்பம் பயக்கவல்லது. மற்றொருவகை நட்பு அகத்தே தீய எண்ணங்களைக்கொண்டு புறத்தே முகமலர்ச்சியுடன் பழகுதல். அத்தகையோரது தன்மையை,

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து"

என்று வாயுரை வாழ்த்து அழகாக எடுத்தியம்புகிறது. இத்தகையோரே தம் நண்பருக்குப் பல வகையிலும் தீங்கினைச் செய்யவல்லாரும், பொறாமை, கோள் சொல்லல், திருடுதல் போன்ற தீக் குணங்கட்கு உறைவிடமுமாவர் என்பது திண்ணம். இத்தகையோர் கொள்ளும் நட்பையே "கூடாநட்பு" என்று பிறிதொரு வகையாக வள்ளுவர் விளக்கியுள்ளார்.

மேற்கூறிய இருவகை நட்பிலும் நாம் நட்புக்கொள்பவர் எத்திறத்தைச் சார்ந்தவர் என்பதை முதலில் ஆராய வேண்டும். அங்ஙனம் ஆராயாது நட்புக் கொளின் அது தீமையாக முடியும் என்பதனை,

"ஆய்ந்தாய்ந்து கொளாதான் கேண்மை கடைமுறை
தான் சாந் துயரம் தரும்"

என்ற வள்ளுவர் வாய்மொழி அறிவுறுத்துகின்றது. மேலும் நாம் பல வகையிலும் ஆய்ந்து நட்புக் கொண்டபின் அவரால் தீங்கு நேர்வதாயினும் அவரை விட்டுப்பிரிதல் கூடாது. அவரிடம் எக் குற்றம் கண்டாலும் அதனை அவர் தன்னிடத்தில் உள்ள உரிமையாலோ அல்லது அறியாமையாலோ செய்துள்ளார் என அறிந்து மறத்தல் வேண்டும். தம்மைக் கண்ணைக் குத்திவிட்டது என்பதனால் எவரும் அதனை வெட்டி எறிய முயலமாட்டார்கள். அவ்வாறே விட்டுப் பிரிதற்கரிய அந்நண்பரையும் எளிதில் துறத்தல் கூடாது. "குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை" என்பது முதுமொழி அல்லவா! இதனை நாம் சித்திரக்கிரீவன் என்னும் புறு அரசன் செய்கையால் அறிகின்றோம். அரிசித்துணுக்குகளில் ஆசை வைத்துத் தன் சொல்லைக் கேளாது வேடனின் வலையில் அகப்பட்டுக் கொண்ட தன் நண்பர்களைத் தன் மேன்மைக்குணத்தால் நல்ல உபாயம் கூறிமீட்டது அப்புறு. இத்தகைய தன்மை பெற்றவர் தம் பகைவராலும் விரும்புதற்குரிய சிறப்பினை அடைவர்.

தம் நண்பருக்கு ஒரு துன்பம் நேர்ந்துழி அதனைத் தன் துன்பமாகக் கருதி உதவி செய்பவர் ஒருவர் உளராயின் அவரே உற்ற நண்பர் ஆவார். ஆயினும் உணர்ச்சி ஒத்தமையால் ஏற்படும் நட்பே யாவற்றினும் சிறந்தது. பண்டைக்காலத்தில் சோழ மன்னனாகிய கோப்பெருஞ் சோழனும், பாண்டிய நாட்டுப் புலவராகிய பிசிராந்தையாரும் ஒருவரை யொருவர் முன்பின் பார்த்திலராயினும் உணர்ச்சி ஒத்தமையால் நண்பராயினர். சோழ அரசன் நல்ல நிலைமையில் இருக்கும் பொழுது பிசிராந்தையார் அவரைக்காண வராதிருப்பினும், அவன் துன்பம் அடைந்த பொழுது தன் மக்கள் செய்கைக்கு நாணி வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தபோது தானும் அங்குச் சென்று அவ்வரசனுடன் வடக்கிருந்து உயிர் விட்டார். என்னே! இவர்தம் நட்பின் சிறப்பு!

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்ற தெய்வப் புலவரின் திருவாக்கிற்கியைய அல்லவோ இவர்தம் நட்பு அமைந்துள்ளது!

இத்தகைய விலைமதிப்பற்றதும், செய்து கொள்ளுதற்கு அருமையானதும்,
"செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாஉள காப்பு"

என்று வாயுரை வாழ்த்தால் சிறப்பித்துக் கூறப்பட்டதுமாகிய நட்பைப் பற்றியும், அதனால் உண்டாகும் இன்பத்தைப் பற்றியும் ஆன்றோர் கூறியுள்ள பொன் மொழிகளையும், வரலாற்றுக் கதைகளையும் படித்து இன்புறுவதல்லாது அதனை நடைமுறையில் செயலாக்க நாம் ஒவ்வொருவரும் முயல்வோமாக!

தெ. ரா. கோமளவல்லி, ஆறும் படிவம் 'அ' பிரிவு.

உள்ளம் களிக்கும் ஓய்வு நேரப்பயிற்சி

என் சிநேகிதிகளுடன் சிறிது நேரம் ஓய்வாகவும், ஆனந்தமாகவும் பொழுதைக் கழிக்க வேண்டி நகரிலுள்ள பூங்காவிற்குச் சென்றிருந்தேன். ஆ ஹா! இயற்கையன்னையின் எழில் நிறைந்த தோற்றத்தை என்னென்று சொல்வேன்! புஷ்பங்கள் நிறைந்த செடி கொடிகள் விதவிதமாகப் பல விதங்களில் பயிரிடப்பட்டிருந்தன. இதைப பார்க்கும்பொழுது "உல்லாசமாகப் பொழுது போக்க பூங்காவிற்குத் தான் வர வேண்டுமோ? நம் வீட்டில் தோட்டத்தில் பலவித செடிகளைப் பயிரிடலாமே" என்ற எண்ணம் தோன்றிற்று. அது உடலுக்கும் சிறந்த பயிற்சியாக இருக்கும்.

தில் ஏனோ எனக்கு மட்டும் உறக்கமே பிடிக்கவில்லை. எனது மனம் என்னும் கூடலிலே சிந்தனை அலைகள் சுழியிட்டு ஓடிக்கொண்டிருந்தன. தியாகம் என்றால் என்ன? எத்தகைய செய்கைகள் தியாகத்தின் பாற்சேரும்? அதில் ஏன் ஒரு சிலர் மட்டுமே பங்கு கொள்கின்றனர்? தியாகம் செய்ய வேண்டியது அவசியந்தானா? என்பன போன்ற வினாக்களுக்குத் தகுந்த விடையைத் தேடிக்கொண்டிருந்தது என் மனம். பிறர் நலனுக்காகத் தனக்குக் கேடு நேரினும், தன் இன்பங்களைத் துறப்பது தான் தியாகம் என்று என் தாத்தா என்றோ கூறியிருந்தார்; ஆனால் அதன் முழுப் பொருளை இன்னமும் என் மனம் உணர்ந்தபாடில்லை.

டிங் டிங் டிங் என்று கடிகாரம் பன்னிரண்டு முறை அடித்து ஓய்ந்தது. சில்லென்று வீசிய வாடைக்காற்று என் உடலை நடுங்க வைத்தது. அத்துடன் ஆறு திங்கள் காலமாக என்னை வாட்டும் இருமலும் சேர்ந்து கொண்டு விடவே (அமைதியான) இரவில் என் குரல் பயங்கரமாக ஒலித்தது. ஜன்னலைச் சாத்தி விடவேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. ஆனால், என்னால் படுக்கையை விட்டு நகர முடியுமா? வெகு சிரமத்துடன் மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டேன். இதற்குள் கட்டில் கீச் கீச் என்று சத்தம் போடவே, சற்றுத் தொலைவில் ஏதோ படித்துக்கொண்டிருந்த நர்ஸ் ரேவதி பாதரக்ஷைகள் டக் டக் என்று மெல்ல ஒலிக்க என் அருகில் வந்தாள்.

“ஏன் பிரபா, இன்னும் நீ உறங்க வில்லையா?” எனப் பரிவுடன் கேட்டு, என் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்த கேசத்தை ஒதுக்கி விட்டாள். வாடைக்காற்று அடிப்பதைக் கவனித்து என் எண்ணத்தை அறிந்தவள் போல் போர்வையை எடுத்துப் போர்த்திவிட்டும் சென்றாள். நர்ஸ் ரேவதிக்கு அன்று “Night duty.”

ஆம்! அவள் ஓர் உலவும் தெய்வம்தான். இவ்வைத்திய சாலையில் ஆறு மாதகாலமாக இருக்கும் நான் தனிமையை மறந்திருப்பது அவளால் தான். நான் மட்டும் என்ன! அந்த “வார்டில்” உள்ள நோயாளிகள் அனைவருமே அங்ஙனம் தான் கூறுகின்றனர்.

முகங்கோணாமல் நோயாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களுக்குக் குறிப்பிட்ட வேளைகளில் மருந்துகளைக் கொடுத்து இரவிலும் அவர்களுக்கு ஆவன செய்பவள் நர்ஸ் ரேவதி. அவள் ஒரு வருடகாலந்தான் அவ்வேலையை அங்குச் செய்து வருகிறாள். எனினும் அக்குறுகிய காலத்திற்குள் தனது உழைப்பின் உயர் தன்மையினால் நோயாளிகளின் பேரன்பைப் பெற்றவள்.

> “அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம்
> கடுத்தது காட்டும் முகம்.”

என்று பொய்யா மொழிப் புலவர் கூறுகிறார். இதன் பொருளாவது கண்ணாடி தன் பக்கத்துள்ள பொருட்களைக் காட்டும். அதுபோல் ஒருவர் மனத்தில் எண்ணுவதை அவன் முகம் வெளிப்படுத்திவிடும். அதாவது அகத்திலுள்ளதை முகத்தில் காணலாம் என்பதாகும். இதன் பயன் பிறர் கருத்தை அவர் கூறாமல் அறிதலாகும். சமூகத் தொண்டில் அதிலும் வைத்தியத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இருக்கவேண்டிய குணங்களுள் இதுவும் ஒன்று. அனைவரும் இதனைக் கடைபிடிக்கிறார்களா? இல்லையே? நர்ஸ் ரேவதி நோயாளிகளின் நன் மதிப்பைப் பெற இதுவும் ஓர் காரணம். வியாதியால் வருந்துவோர் வேண்டுவனவற்றை அவர்கள் கூறுதற்கு முன்னரே குறிப்பறிந்து ஆற்றும் ஆற்றல் மிக்கவள்.

> “ஐயப்படா அகத்தது உணர்வானைத்
> தெய்வத் தோடொப்பக் கொளல்.

என்ற குறளின் மூலம் ஒருவர் மனக்கருத்தை அறிய வல்லவர் கடவுளுக்கு ஒப்பாவர் என திருவள்ளுவர் கூறியிருப்பது காண்க.

நர்ஸ் ரேவதி இணைசொல்லையே தனது உடன் பிறந்த சகோதரியாகக் கொண்டவள். வியாதியால் வருந்தும் நோயாளிகளுக்கு தாங்கள் நோயாளிகள் என்னும் நினைவு ஏற்படா வண்ணம் இனிமையுடனும் ஆறுதலுடனும் பேசி அவர்களை மகிழ்ச்சியும் அமைதியும் பெறச் செய்வாள். "கண்ணிற்கணிகலன் கண்ணோட்டம்" என்னும் முதுமொழிக்கேற்ப, பிறரிடம் காட்டும் கருணையையே தன் கண்ணிற்கு அணிகலனாகக் கொண்டவள் ரேவதி.

தனது ஓய்வு நேரத்தில், ரேவதி ஊரில் தனிப்பட்டு வாழும் மக்களுடனும் சேரிகளிற் புகுந்து தாழ்த்தப்பட்ட மக்களுடனும் நெருங்கிப்பழகி, அவர்கட்குச் சுகாதார முறையில் வாழ்தல், நோய்களைத் தடுத்தல் ஆகிய விஷயங்களைப் போதிப்பதும், அங்குள்ளவர்களுக்கு வியாதிகள் ஏற்பட்டால் அவர்களை வைத்திய சாலைகளுக்கு அழைத்துச் சென்று இலவச வைத்தியமும் அளிக்கிருள். விபத்துக்குள்ளானவர்களுக்கு முதல் உதவி செய்தல் போன்ற பல உதவிகளைச் செய்வதிலும் ஈடுபட்டுள்ளாள். ஒரு நாள் அவளை " நீங்கள் இப்படி சிறிதும் ஓய்வின்றி வேலை செய்வதேன்?" எனக்கேட்டேன். உடனே அவள் அமைதியாகப் பிறர்க்குத் தொண்டு செய்வதில் தான் பேரின்பம் காணஇயலும்; ஜாதி வேறுபாடுகள் மறைந்து மனிதப் பற்று வேரூன்றும். கருணை, தியாகம், தூய்மை, சாந்தம் என்ற குணங்களின் உச்ச நிலையை எய்த நோயுற்ரோர்க்கும், பொது ஜனங்களுக்கும் உழைப்பதே என் சகோதரிகள் கடனும் என்கடனுமாகும். என்கடன் பணி செய்து கிடப்பதே என்னும் இந்நிலையை அடைய அரும்பாடுபடுவதிலேதான் வாழ்க்கையிலே மகிழ்ச்சி தோன்றும். இதன் வழியாகவே புனிதமான உள்ளமும் உடலும் நமக்கு வந்து எய்தும்" என்று கூறிஞள். அவள் கூறியதின் பொருள் விளங்கிற்ரே இல்லையோ ? "பிறர்க்குத் தொண்டு செய்வதே பேரின்பம்" எனும் பொன்மொழி என் செவியில் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது.

இதற்கிடையில் மேலும் இரண்டு திங்கள் சென்றது. நர்ஸ் ரேவதியின் குறையாத உற்சாகத்தையும் பொதுநலத் தொண்டையும் கண்டு வியந்த என் மனம் அவளது வாழ்க்கை வரலாற்றை அறிய விழைந்தது. என் விருப்பத்தைத் தெரிவித்ததும் அவள் சிறிது தயங்கிஞள். எனினும் எனது ஆவல் மிக்க வற்புறுத்துதலினுல் அவள் கூறலாஞள்.

x . x x

ஆம் ! அப்போது அவள் ஓர், அறியாமை நிறைந்த அபாக்கியசாலிப் பெண் தான். அவளது வாழ்க்கைச் சித்திரத்தைக் கேட்ட கல்லும் கண்ணீர் விடும்.

ஊரின் புறத்தே உள்ள தோட்டத்துடன் கூடிய அழகிய இல்லத்தில் தான் அவள் வசிக்கிருள். இதென்ன ? அவ்வீட்டுத் தலைவி இன்னும் உறங்கவில்லையா ? இன்னும் அங்கு விளக்கு எரிந்து கொண்டிருக்கிறதே.

டக் டக் டக் என்று பாதரக்ஷைகளின் ஒலி கேட்கிறதே. வருவது யாராயிருக்கக்கூடும் ? அவரைப் பார்த்தால் வைத்தியர் போல் அல்லவா தோன்றுகிறது. அ...ப்...ப...டி...யா...ஞ...ல் இவ்வீட்டில் எவருக்கேனும் உடல் நிலை சரியில்லையா?

எ...ன்...ன ? படுக்கையருகிலே கவலை தோய்ந்த முகத்துடன் கண்கள் நீரைப் பொழிய உட்கார்ந்திருப்பது ரேவதியல்லவா ? படுக்கையில் இருப்பது யார் ? ஓ ! அவளது குழந்தை ரவியா !

வைத்தியரை அழைத்துச் செல்வது ரவியின் தந்தையல்லவா ?

ஆம், குழந்தை ரவிக்குத்தான் இருபது நாட்களாக உடல் நிலை சரியில்லை. அவனுக்கு வந்திருப்பது "டைபாய்ட்" சுரம் என்றும் அதனுல் அவர்கள் உணவு விஷயத்தில் அதி ஜாக்கிரதையுடன் இருக்க வேண்டும் என்றும் டாக்டர் கூறியிருந்தார். இதென்ன ரேவதி அதன்படி நடக்கவில்லை போலிருக்கிறதே, தினசரி தாங்கள் உண்ணும் உணவையே கொடுத்து விட்டாளா ?

உள்ளத்திற்கும் மகிழ்ச்சியைக் கொடுக்கும். நம் வீட்டுத் தோட்டத்தில் நாமே வேலை செய்து அங்குச் செடிகள் வளருவதைப் பார்த்து நாம் அடையும் ஆனந்தம் இருக்கின்றதே அது போன்ற மகிழ்ச்சி வேறு எதிலும் நமக்குக் கிடைப்பதில்லை. நம் முயற்சியானது நமக்குப் பலனை அளிக்கத் தொடங்கும்போது நம் மனது எவ்வளவு குதூகலமடையும்!

நன்றாக நிலத்தைக் கொத்தி எருப்போட்டு பாத்திகளைப் பிரித்து விதைகளைப் போட்டு தண்ணீர் பாய்ச்சுகிறோம். இரண்டு நாள் கழித்து விதைகள் சின்னஞ் சிறு செடிகளாக இரண்டு இலைகளோடு ஆரம்பிக்கின்றன. அப்பொழுது ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்தவர்களைப் போன்று பெருமிதம் அடைகின்றோம். செடி வளர்ந்தால் மாத்திரம் போதுமா? அதைக் கண்ணும் கருத்துமாய், பூச்சிகள் செடிகளைப் பாதிக்காமலும், கொடிகளாயிருந்தால் படருவதற்கு இடம் அமைத்துக் கொடுத்தும், செடிகள் சாய்ந்து விடாமல் அவற்றிற்குத் துணையாகக் கழிகளை நிறுத்தி வைத்தும் பாதுகாக்கிறோம். அச்செடிகள் புஷ்பிக்க ஆரம்பித்ததும் வெற்றியின் சிகரத்தை அடைந்தவர்கள் போல் களிப்புறுகிறோம். எல்லாம் சரி; செடிகளை வளர்த்து விட்டால் மாத்திரம் போதுமா? செடிகளை அவற்றின் வகைகளுக்கேற்ப பிரித்து எந்தெந்த இடத்தில் என்னென்ன செடிகளைப் பயிரிடலாமோ அந்தந்த இடத்தில் அவையவற்றைப் பயிரிட வேண்டும்.

வீட்டின் முன்புறத்தில் அழகாகப் புஷ்பச் செடிகளைப் பயிரிடலாம். வீட்டைச் சுற்றிலும் சுவருடன் கூடிய வீடாயிருந்தால் அழகாக வாயிற்புறத்தில் கொடிகளை அச்சுவற்றின் மேல் படரவிட்டு வளர்க்கலாம். வெளி வாயிலிலிருந்து வீட்டின் முன் வாயிற் பக்கம் வரையில் நடப்பதற்கும் வண்டிகள் போவதற்கும் போதிய வழியை விட்டுப் பாதையின் இருபுறங்களிலும் புஷ்பச் செடிகளையும் 'குரோட்டன்ஸ்' செடிகளையும் வளர்க்கலாம். நல்ல நிழல் கொடுக்கும் மரங்களைப் பயிரிடலாம். செடிகளும், மரங்களும் நம் வீட்டைச் சுற்றியிருப்பதால் நாம் வெளிவிடும் கரியமில வாயுவைப் பயன்படுத்திக் கொள்கின்றன. வெயிற் காலங்களில் வெயிலும் அதிகமாகத் தெரியாது.

வீட்டின் அலங்கரிப்புக்காகச் செடிகளை வளர்க்கின்றதிலும் சில குறிப்புகளைக் கவனிக்க வேண்டும். வீட்டின் மேலும், ஜன்னல்களிலும் கயிறுகளில் கொடிகளைப் படர விட்டு அதைக் கொண்டு பலவிதங்களில் அலங்காரம் செய்கின்றார்கள். பார்ப்பதற்குக் கோலம் போட்டதைப் போல் இவை அழகாக இருந்தாலும் இவற்றினால் சில கெடுதிகளும் ஏற்படுகின்றன. ஜன்னல்களில் செடிகளைக் கட்டி வளர விடுவதினால் பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும் இதனால் வீட்டில் பூச்சிகள் வர ஏதுவாகும். இம்முறை அவ்வளவு சிறந்ததல்ல. அதற்குப் பதில் வேலிகளில் வளர விடலாம். பந்தற்கால்களை நிறுத்தி அதில் பந்தல் போல் வளர விடலாம். அதன் அடியில் உட்காருவதற்கான மேடைகள் அமைக்கலாம். அழகாக சிறு கீரை போன்ற செடிகளை வளர்த்து அவற்றினால் அநேகவித அலங்கரிப்புகள் போன்று அமைத்தும், எழுத்துக்களைப் போன்று (அதாவது 'நல்வரவு' போன்ற எழுத்துக்கள்) அலங்காரமாய் வளர்த்து அவைகளை ஒழுங்காகக் கத்தரித்தும் அமைக்கலாம். இவ்வளவும் வீட்டின் முன் பக்கமாகவும், பக்கங்களிலும் செய்தால் பார்வையாகவும் வீட்டிற்கு ஒரு நல்ல தோற்றத்தையும், அழகையும் கொடுப்பதாகவும் இருக்கும்.

வீட்டின் முன் புறத்தில் மாத்திரமன்றி பின்புறங்களிலும் செடிகளைப் பயிரிடலாம். இச் செடிகள் காய்கறிச் செடிகளாயிருந்தால் மிகவும் நல்லது. காய்கறித் தோட்டம் போடுவதினால் நமக்கு மிகவும் நன்மையுண்டு. காய்கறித் தோட்டம் போடும் பொழுது நாம் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. காய்கறித் தோட்டம் போட்டு விட்டால் மாத்திரம் போதாது. செடிகள் எத்தன்மை வாய்ந்தவை என்பதையும் கவனிக்க வேண்டும். பூசனி, பரங்கி போன்ற செடிகள் தரையில் படரும் தன்மையுடையன. அவைகளைப் பந்தலில் படர விட முடியாது. ஏனெனில் அவைகளின் காய்கள் நிறை மிகுந்தவையாகும். அவரை, புடலை, பாகல் முதலிய செடிகளைப் பந்தல் போட்டுப் படர விடலாம். தக்காளி, கொத்தவரை

முதலிய செடிகளைப் படரும் தன்மை உள்ள செடிகள் என்று சொல்ல முடியாது. இருந்போதிலும் அவற்றையும் ஒரு கழியைத் தரையில் ஊன்றி அதனுடன் சேர்த்துக் கட்டி வளர விடவேண்டும். ஏனெனில் இவைகளின் தண்டுகள் மிகவும் மெலிந்த தன்மையுடையவை. இவை செடியின் பாரம் தாங்காமல் வளைந்துவிடும். காய்கறிச் செடிகளுக்குக் காய்க்கும் போது ஒரு தடவை எரு போடுவது நல்லது. அதனால் செடியானது நன்ருய்க் காய்க்கும். மேலும் களைச் செடிகளையும் அடிக்கடி எடுத்து விடவேண்டும். களைச் செடிகள் இருப்பின் செடியின் வளர்த்தி குறைவ துடன், நமக்குச் செடிகளிலிருந்து கிடைக்கும் முழுப்பயனும் கிடைக்காது.

காய்கறிச் செடிகளை நம் வீடுகளில் பயிரிடுவதால் ஏற்படும் நன்மைகளில் முதன்மையானது 'ஜீவசத்துக்கள்' நிறைந்த புத்தப்புதிய காய்கறிகளை அன்ருடம் சமைத்துப் புசிக்கலாம். இதனுல் நமக்குப் போதிய தேகசக்தி உண்டாகின்றது. நமக்கு வேண்டிய உயிர்ச்சத்துக்கள் கிடைக்கின்றன. மேலும் கடைத் தெருவிற்குச் சென்று கறிகாய் வாங்கிவரும் வேலை குறையும். நமக்கும், நம்வீட்டில் நாமே நம் கையால் பயிரிட்டு வளர்த்த காய்கறிகளை உண்கிறேம் என்ற மகிழ்ச்சி ஏற்படும்.

சரி, இவ்வளவும் வீட்டைச் சுற்றிப் பெரிய தோட்டம் உள்ளவர்களுக்குத் தானே! வீட்டைச் சுற்றித் தோட்டம் இல்லாதவர்கள் என்ன செய்வது? எப்படிச் செடிகளைப் பயிரிடுவது என்று நீங்கள் கேட்பது என் காதில் விழுகின்றது; பொறுங்கள், சொல்கிறேன்.

ஏன்? பூந்தொட்டிகள் இல்லையா? அவைகளை வைத்து அவற்றில் பயிரிடலாமே வெயில் வரும் இடங்களில் பூந்தொட்டிகளை வைத்துப் பயிர் செய்வதால் நமக்குத் தோட்டத்தில் செய்யும் வேலையைவிட வேலையும் குறையும். பூந்தொட்டிகளில் புஷ்பச் செடிகளை வளர்த்து வாயிற்பக்கம் வைக்கலாம். காய்கறிகளைப் பயிரிட வீட்டின் திறந்த முற்றம் உள்ள இடங்களில் வைக்கலாம்.

நாம் நம்முடைய ஓய்வு நேரத்தைத் தோட்டவேலை செய்வதில் செலவழிப்பதன் மூலம் நமது உடலுக்கு நல்ல சுறுசுறுப்பும், அதே தருணத்தில் மகிழ்ச்சியும், திருப்தியும் ஏற்படுகின்றது. தினம் மலரும் புஷ்பங்களைப் பார்க்குந்தோறும் நமக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுகின்றது! நமக்கு மாத்திரமன்றி நம் இல்லத்திற்கு வருபவர்களுக்கும் செடிகளையும் புஷ்பங்களையும் பார்ப்பதினுல் மகிழ்ச்சி ஏற்படும். இவ்வளவும் தோட்ட வேலை செய்வதினுலன்றோ ஏற்படுகின்றது. உள்ளத்திற்கு உற்சாகமும், உடலிற்குப் பலமும் அளிக்கும் சிறந்த பயிற்சி இதைவிட வேறு உண்டோ? தோட்ட வேலையை எப்பொழுதும் செய்யவேண்டுமென்பதில்லை. ஓழிந்த நேரத்தில் செய்தால் போதுமானது. ஆகையினுல் இதை 'உள்ளம் களிக்கும் ஓய்வு நேரப் பயிற்சி' என்று சொல்வது மிகப்பொருத்தமானதாகும்.

T. K. விஜயம், 5-ம் படிவம் 'அ' பிரிவு.

துன்பத்திலுதித்த இன்பம்

மார்கழி மாதத்து குளிர்காற்று சிலு சிலு வென்று ஜன்னல் வழியாய் அடித்துக் கொண்டிருந்தது. லேசாக நித்திரையில் ஆழ்ந்திருந்த நான் திடீரென விழித்துக்கொண்டேன். வெளியே ஆகாயத்தில் நிர்மலமாய்த் தன் அமுத கிரணங்களை அள்ளி வீசிக் கொண்டிருந்தது வெண்ணிலா. ஏறக்குறைய அந்த "வார்டில்" இருந்த நோயாளிகள் அனைவருமே நிஷ்களங்கமாய் நித்திரையிலாழ்ந்திருந்தனர். வழக்கமாக வியாதியின் கொடுமையினுல் கூக்குரலிடும் இரண்டொரு நோயாளிகளும் கூட உறங்கி விட்டனர். நர்ஸ் ரேவதியும்கூட நோயாளிகளுக்குக் கொடுக்கவேண்டித் மருந்துகளைக் கொடுத்துவிட்டு, மின்சார விளக்குகளையும் அணைத்து விட்டு, ஓரிடத்திலமர்ந்து ஏதோ ஓர் புத்தகத்தைப் படிக்கலானுள். ஊரே உறங்கும் அச்சமயத்

நூல் நிலையத்தின் அவசியம்

உலகம் நிலைபெறுவது செல்வப்பெருக்கினாலன்று; அது மேன்மை வாய்ந்த எண்ணங்களாலும், நோக்கங்களாலுமே நிலைபெறுகின்றது. உயர்ந்த எண்ணங்களையும், நோக்கங்களையும் பொது மக்களுக்கு ஊட்டுவது புத்தகாலயம் அல்லது நூல்நிலையம். அத்தகைய நூல்நிலையம் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு பள்ளியிலும் அவசியம் இருக்கவேண்டும். நூல்நிலையத்தால் நமக்கு அறிவு நன்கு விருத்தியடையும். நமக்கு விளங்காத அரும்பதங்களையும், சொற்றொடர்களையும் எளிதிலே கண்டு, அகராதிகளின உதவியால் அறியலாம். அங்கே விஞ்ஞான நூல்களையும் காணலாம். இயற்கையின் அற்புதங்களையும் மனிதனின் அறிவுத் திறத்தினால் அமைந்த புதுமைகளையும் அறியலாம். இன்றைய உலகம் விஞ்ஞானத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்கின்றது. விஞ்ஞானம் இன்றி உலகில்லை. மக்கள் வாழ்க்கையை வளம் பெறச் செய்தற்கு விஞ்ஞானமே சிறந்த சாதனம். சரித நூல்கள் இறந்த கால நிகழ்ச்சிகளை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன. பழங்காலத்தில் வாழ்ந்த மக்கள் எந்நிலையில் விளங்கினார்கள். பண்டைக் காலத்தில் நம் நாடும், மற்ற அயல் நாடுகளும எப்படியிருந்தன என்று நமக்கு சரித நூல்கள் தெற்றென விளக்குகின்றன. மத நூல்களையும், மேனாட்டுக் கீழ் நாட்டுக் கலை நூல்களையும் நூல்நிலையத்தில் காணலாம். மதப்பற்றுடையவர்கள் நூல்களைப் படித்து, அதில் கூறியுள்ள வேத வாக்கின்படி நடப்பார்கள். மேல் நாடுகளில் கலையின் நுகர்ச்சி அதிகமாயிருக்கிறதா? இல்லையா? என்பதையும் அவர்கள் கலையை எம்முறையில் நடத்துகிறார்கள் என்பதையும் விளக்கும் காவியங்களும், நாடகங்களும் கதைக் கொத்துகளும் நம் உணர்வைப் பெருக்கி உள்ளத்திற்கு இன்பமளிக்கின்றன. இத்தகைய எண்ணிறந்த நூல்கள் நூல்நிலையத்தில் இருக்கின்றன.

மக்களுக்கு கல்வி கண் போன்றது. கல்வியில் எல்லையும் பரப்பும் வரவரப் பெருகி வருகின்றன. கல்வியே கண், கல்வியே பொருள், கல்வியே இன்பம், சுருங்கக்கூறின எல்லா நன்மைக்கும் கல்வியே காரணம். இத்தகைய கல்வியை ஆண், பெண் இருபாலரும் கட்டாயம கற்றே ஆகவேண்டும். வருடந்தோறும் பல்லாயிரக்கணக்கான நூல்கள் வெளிவருகின்றன. பழங்காலந்தொட்டு நாளிது வரையுள்ள ஆயிரம் ஆயிரம் அறிஞர்கள் பற்பல மொழிகளில் எழுதி வைத்துள்ள கருத்துக்கள், கற்பனைகள், சிந்தனைகள நூல்கள் நமக்கு உதவுகின்றன. அறிவினால் ஆராய்ந்த் கற்றற் கரிய பொருள்கள் அளவின்றிப் பரந்து கிடக்கின்றன. நூல்கள் மலிந்து பெருகிக் கிடக்கின்றன.

> "கல்வி கரையில; கற்பவர் நாள் சில;
> மெல்ல நினைக்கின் பிணிபல;—தெரிந்து
> ஆராய்ந்து அமைவுடைய கற்பவே, நீர் ஒழியப்
> பால் உண் குருகின் தெரிந்து"—நாலடியார்.

" கல்வியின் எல்லையின் அளவு பெருகிவருகின்றது. அதை கற்பவர்களுடைய நாட்களோ மிகக் குறைவு என்று நன்றாக விளங்குகின்றது.

அறிவுத்தெய்வத்தின் கோயில் புத்தகாலயம் அல்லது நூல்நிலையம். பள்ளிக்கூடம்போன்றே நூல் நிலையமும நமக்கு இன்றியமையாத ஒன்று. நல்ல முறையில் நூல் நிலையத்தைப் பயன்படுத்திக் கொள்ளும் மக்களிடம் நாட்டுப்பற்று, நாகரிகம், ஒற்றுமை யுணர்ச்சி முதலியவை ஏற்படும். அதனால் அவர்கள கிணற்றுத் தவளையைப்போல் இராமல் உலக விஷயங்களை அறிந்து வாழ்க்கைப் படகை நன்முறையில் செலுத்துவார்கள். நாட்டு மக்களை அறியாமை இருள்போலச் சூழ்ந்திருக்கின்றது. ஆழ்ந்து அகன்ற இவ்வறியாமையைப் போக்க அரசாங்கத்தாரும், அறிஞர்களும ஒன்றுகூடி முயல்வது அவசியம். இம்முயற்சியில் நாம் மேற் கொள்ளவேண்டியது நூல்நிலையங்களை அங்கங்கே நிறுவுவதேயாகும். சென்னை இராஜ்யத்தில் நூல் நிலையச் சட்டம் ஒன்று நிறைவேறறப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தார் நூல் நிலையங்களைப் பல இடங்களில் நிறுவ, நல்ல முயற்சி எடுத்து வருகிறார்கள்.

வாசக சாலைக்குச் செல்வதால், வாசக சாலைக்கு வரும் பலருடைய நட்பும் கிடைக்கும். பணச்செலவில்லாமலே பத்திரிகைகளைப் படித்துப் பயன் அடையலாம். ஆதலின் நாம் "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழிப் படி ஓய்வு நேரங்களிலெல்லாம நூல் நிலையததிற்கும், வாசக சாலைக்கும சென்று நல்ல புத்தகம் வாசிக்கும பழக்கத்தை மேற்கொள்ள வேண்டும். அறிவு பெருகி வளர்வதற்கு இதனினும் சிறந்த கருவி வேறொன்றும் இந்த உலகத்தில் இல்லை!

பெ. செல்வராணி, 5ம் படிவம் 'அ' பிரிவு.

படித்து முடியுங்கள்

1. உயிர்விடும்பொழுது எழுதுவது உயில்
 ஆனந்த நடனம் புரிவது ... ...
 இன்னிசை எழுப்புவது ... ...
 வேகமாய்ச் செல்வது ... ...

2. மானத்தைக் காப்பது உடை
 பணடங்கள் விற்பது ... .
 பாம்பைக் கண்டு அஞ்சுவது ... ...
 பலகாரங்களில் முதலிடம் பெறுவது ... ...

3. மலரில் இருப்பது மணம்
 நல்வாழ்வுக்கு வேண்டுவது ... ...
 பண்பின் மறுபெயர் ... ...
 உயிரற்ற உடலின் பெயர் ... ...

4. பணத்தின் வேறு பெயர் காசு
 சூதாட்டத்தில் கொடியது ... ...
 போலீஸார் பிடிப்பது ... ...
 யாவரிடத்தும் அன்பாகப் ...?... ...

விடை:—1. மயில், குயில், ரயில். 2. கடை, படை, வடை. 3. பணம் குணம, பிணம். 4. ரேசு, கேசு, பேசு.

பெ. செல்வராணி, 5-ம், படிவம் 'அ' பிரிவு.

எனது காதை (நூல்)

பகலவன் பகலெல்லாம் பணியாற்றி அதிக அலுப்புற்று மலைவாயிலில் அடைந்து கொண்டிருந்தான். முதல் படிவத்து ஒரு மாணவி அடித்த எங்கள் பள்ளியின் மணியோசை அன்று பள்ளி நேரம முடிந்து வீடுசெல்ல வேண்டும் என்ற எண்ணத்தை எங்களுக்கு நினைவுபடுத்தியது. நான் இடது கையில் புத்த கத்தையும், வலது கையில் உணவுப் பாத்திரத்தையும், மனதில் சில எண்ணங் களையும், சுமந்து கொண்டு நடந்தேன். என் கால்கள் என்னையறியாமலேயே 'புதுக் கட்டிடம்' என்று அழைக்கப்படும் அந்த 'போதனுமுறை பயிற்சி சாலை'யை நோக்கி நடந்து கொண்டிருந்தன. அந்தப் பாதையில் மனித சஞ்சாரம் ஓய்ந்திருந் தது. சாலையின் இருமருங்கிலும் உள்ள மரங்களில் ஆங்காங்கு புள்ளினங்கள் சிற கடித்து கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்தன. நான் நடந்துக் கொண்டிருந் தேன். வழியில் உலர்ந்த இலைகள் 'மடமட' வென்று ஒடிந்து நொறுங்கும் சப்தம் தான் என சிந்தனையைச் சிறை செய்தது.

சிறிது தூரத்தில் ஒரு இளநங்கை எக்காரணத்தை முன்னிட்டோ விரை வாகச் சென்று கொண்டிருந்தாள். நான் உற்று நோக்கினேன். ஆனால் அவளை யல்ல, அவளுடைய கைப்பொருளைத்தான். அதுதான அவள் கையிலிருந்து அவளை அறியாமலேயே விழுந்த ஒரு காகிதப் பொட்டலம். அவசரத்தில் கைநழுவ விட்ட அந்தப் பொருளை அவளிடம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு

ஆம், அதனால் தான் ஒன்றுமறியாக் குழந்தை ரவியின் உயிர் இம்மண்ணுலகை விட்டுச்சென்று கொண்டிருக்கிறது. ஆ! இதென்ன! வைத்தியரும் உணவினால் தான் ஏதேனும் தவறு ஏற்பட்டிருக்கக் கூடுமென கூறுகிறாரே!

அவள் கதறினாள். என்ன பயன்?

அவள் உள்ளம் உடைந்தது. அவளுக்குத் தன் எதிர்கால வாழ்க்கை வறண்ட பாலைவனமாக இருண்டு காணப்பட்டது. அதிலே சோலையென்னும் அமைதியையும் இன்பத்தையும் காண விழைந்தது மனம். அமைதியை நாடிய அவள் தன் கணவன் சொற்படி நர்ஸ் தொழிலை மேற்கொண்டாள்.

எனவே செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் சங்கத்தில் சேர்ந்தாள். முதலுதவி பயிற்சி அளித்தல், மருத்துவப் பணிப்பெண்களைப் (நர்ஸ்) பயிற்றல், சுகாதார ஆரோக்கிய விதிகளை மக்களிடையே பரப்புதல், முதலுதவிக்கேற்ற சாதனங்களை இலவசமாக அளித்தல், முதலுதவி தளம் அமைத்தல், ஜாதி மத இன வேறுபாடின்றிப் போர், அமைதி காலங்களில் நோயுற்றோர்க்கும், காயம் பட்டோர்க்கும் உதவி புரிதல் முதலிய இச்சங்கத்தின் குறிக்கோளாகும். இத்துறையில் நுழைந்து பயிற்சி பெற்ற ரேவதி அதில் மிக்க திறமையுடையவளானாள். அவள் விரும்பியபடியே இத்தொழிலில் இன்பமும் அமைதியும் கிட்டியது.

உடல் மனம் ஆகிய இவற்றின் உறுதியைப் போற்றி வளர்க்கும் சஞ்சீவி தொழிலில் ஈடுபடுவதாகும் தொழிலின் வகைகள் பல. அவற்றில் அவரவர்கள் காட்டும் ஊக்கமும் வெவ்வேறு, இவையெல்லாம் அவரவர்கள மன நிலையைப் பொறுத்தனவாம். எனினும நாம் மேற்கொள்ளும் தொழில் பிறர்க்குப்பயன் தரத்தக்க, உயரிய குறிக்கோளைக் கொண்டதாகவே இருக்கவேண்டும். நமது ஆற்றலை நல்வழியில் பயன் படுத்தி நம்மையும், பிறரையும் வாழ்விப்பதே மனிதப் பிறப்பின் சிறப்பாம். "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற தாயுமானவரது பொன் மொழியைக் கடைபிடித்து நடப்போமாக.

தியாகம் என்பதன் பொருள் இப்போது எனக்கு மிக நன்றாக விளங்கிற்று. அதாவது பிறரது வாழ்வை வளமாக்க, தனக்குக் கேடுற்ற போதும தன்னலமின்றி உதவி செய்வது முதல், உடல், பொருள், ஆவி ஆகிய இவையும் கொடுக்க முன் வருவதே.

இப்போது கூறுங்கள்! பொது நலத் தொண்டிற்காக உலகையே துறந்த நம் கதாநாயகி செய்தது அளப்பருந் தியாகந்தானே?!

N. சரளா, 5ம் பாரம், 'அ' பிரிவு.

பல்லாண்டு பாடுகிறோம்

விலங்கினின்று வந்தோம், கடவுளாகப் போகிறோம். போகும் வழியிலே மனிதனாக இருக்கிறோம். அவனைக் கடவுளாக்கும் சக்தியே! பார்புகழ் பகுத்தறிவே! உன்னைப் பல்லாண்டு பாடி வாழ்த்துகிறோம்! நீ எத்தனை விந்தைகளைச் செய்கின்றாய், அப்பப்பா! எண்ண முடியாதவை! எழுத முடியாதவை! சொல்ல வேண்டுமென்றால் நந்தமிழிலே வார்த்தையில்லை!

விலங்குடன் விலங்காக வாழ்ந்தான் மனிதன். உடையில்லை அரையிலே! உள்ளத்திலே வளர்ச்சியில்லை. விலங்கைப் போலவே உண்டு உறங்கினான். பச்சை மாமிசம் அப்படியே விழுங்கினான். கல்லைப் பயன்படுத்தச் செய்த பகுத்தறிவே! அந்தச் சிறுவிதை, சிறு மீன் சினையினும் நுண்ணிய விதை, இன்று பெரியதோர்

மரமாகப் பரிமளிப்பதைப் பார். கல்லைச் கூர்மையாக்கியவன் காலத்தை, தூரத்தை வென்று விட்டான்.

வெறியனை வணங்கினன். வெறியாட்டம் ஆடினன். நரபலியாம், நாயகன் கேட்பானும். அளித்தவன் ஆயுள் நீடிக்குமாம். சித்திகள் என்று பெயராம். அடைய முடியாத சக்திகளாம் நம்பினன். நம்பியவாறே நடந்தான். அன்றும் பகுத்தறிவே! நீ எவ்வளவு அழகாக நடனமாடினய். உழைக்காமல் உண்டு களிக்க நினைத்தவன் உன்னையல்லவா நன்ருகப் பயன்படுத்தினன். உன்னைக் கொண்டுத் தானே சிந்தித்தான். மனிதனை, சொந்த சகோதரனை, என்னும் ஏமாற்றிவர வழியென்ன என்று நினைத்தான். அந்த உலகம்! அது தான் மோட்சம்! இன்ப மயமான உலகம்! அதற்கு ஓர் தூதுவன்! எவ்வளவு அழகான கற்பனை? வாயு, வருணன், இந்திரன், சாத்தான் என்றெல்லாம்.

அது மட்டுமா? நாம் வாழும பூமிதான் பெரியது. அதைச் சூரியன் சுற்றுகிறதாம். உன் துணை கொண்டல்லவா இவ்வளவு அழகான உண்மை எழுந்தது. உழைக்காது உண்டு களிக்கும கூட்டமும் உன்னைப் பயன் படுத்தியது விந்தையே!

ஆனல் பகுத்தறிவே! நீ அன்று குடத்திலிட்ட விளக்கு; இன்றோ குன்றிலிட்ட விளக்கு. எங்கும் பட்டொளி வீசுகிருய். மூட நம்பிக்கைக் கதைகள் கால் பிடரியில் பட ஓடுகின்றன.

ஆண்டவன் எண்ணியிருந்தால் இறக்கையிருக்காதா என்றீர்களே! இதோ பார் பறவையெனப் பறந்து வரும் எம் பகுத்தறிவைப் பார்! நீந்த மீனைப்போல் முடிவில்லை என்ருயே! கடலிலும், விண்ணிலும் செல்லும் எம் பகுத்தறிவைப் பார்! வைசூரியாம், வெறி கொண்ட தேவியாம். வெறியாட்டம் ஆடுமாம். ஆட்டையும், கோழியையும அள்ளித் தின்னுமாம். வேப்பிலையைச் சுற்றிக் கொண்டு கூத்தாட வேண்டுமாம. ஆனல் இன்று மனிதன் நிமிர்ந்து கூறுகிருன். ஊசி கொண்டு ஓட்டுவேன் உங்கள் தெய்வத்தை என்கிருன்.

கிரஹணக் கதையைக் கேட்டதுண்டோ? பாம்புகள் இரண்டாம், பகலவனையும் மதியையும் விழுங்குமாம், மீண்டும கக்குமாம். பகுத்தறிவே! உன் துணையினல் மூன்று கிரகங்களும் ஒரே கோட்டில் வருவதுதான் காரணம் என்கிருன் மனிதன்.

குகையிலே வாழ்ந்த மனிதனைக் கோபுரம் கட்டத்தூண்டிய பகுத்தறிவே! கால் வடித்த மனிதனை குண்டு வீசச்செய்த பகுத்தறிவே! கால்வலிக்க நடந்தவனைக் ககனத்திலே பறக்க வைத்த பகுத்தறிவே! கொன்ருடி வந்தவனை உலகம் கொண்டாடும வகையில் வாழச் செய்த பகுத்தறிவே! பச்சையிலை ஆடை பட்டாடையாக மாறச்செய்த பகுத்தறிவே! புல்லரிசி உணவைப் பச்சரிசி உணவாக்கிய பகுத்தறிவே! உன்னைப் பல்லாண்டு கூறி வாழ்த்துகிரோம! அழிவை நாடிச் செல்லாதே. ஆனல் ஆக்கத்தை நாடிச் செல் என்று வேண்டுகின்ரோம்.

சே. ராஜம்மாள், (5-ம் படிவம் 'ஆ' பிரிவு.)

மூவேந்தர் சிறப்பு

பொன்னியின் கரைவளர் பூபாலன்
சென்னியின் சிறப்பைச் செப்புங்கால்
மன்னிய மா மேரு மலையும்
பன்ன விழைந்தது என்ப.
பார்மிசை மிகுபுகழ் சேரன்
வீரம் யாதென வினவினல்
கரி யொருக்கத் தரியுதன கரம்
சரமுங் கொணடது போலாம்.
வீங்குநீர் வேலையதன் முத்தும்
வங்கம் செல்லும வணிகருமுடைப்
பாங்குடன் பாணர் போற்றும் பாண்டியன்
தங்கமெனச் சங்கம் உரைக்கும்.

ரா. மைதிலி, (நான்காம் படிவம் 'ஆ' பிரிவு)

விரைவாக நடந்தேன். ஆனல் அவள் மறைந்துவிட்டாள். இந்தப் பொருளைக் குனிந்து எடுத்தேன், பிரித்துப்பார்த்தேன். அது ஒரு நூற்ற நூல்கட்டு. அந்த நூல்கட்டு சிறிது கலைந்து காணபபட்டது. அது தன் வாழ்வில் ஏற்பட்ட இன்னல் களுடன் போராடிக் களைப்புற்றதுபோல் என் கண்களுக்குப் புலப்பட்டது.

“ஏன் பார்க்கிருய்” ? என்றது ஒரு குரல்.

சுற்று முற்றும் பார்த்தேன். ஆள் அரவமே இல்லை.

“என்னைப்பார், நான்தான் பேசுகிறேன்,” என்றது அதே குரல். திடுக்கிட்டேன்; இருப்பினும் சமாளித்துக்கொண்டு, “என்ன! நூலே, நீயா பேசுகிருய்?” என்றேன்.

“ஆமாம், என் வாழ்வின் இன்னல்களைத் தெரிவித்து, ஆறுதல் பெற ஒருவரும் இல்லையே என்று ஏங்கினேன். நல்ல வேளையாக நீங்கள் கிடைத்தீர்கள்.”

“என்ன! உனக்குக்கூட வாழ்வில் இன்னலை அனுபவிக்கும் படலம் உண்டா? உன் வரலாறு யாது?”

“அன்புடன் கேட்பீர்களானல் சொல்வேன்.”

“சரிசொல், கேட்கிறேன்.”

(நூல் சொல்லத் தொடங்கியது).

நூல் :—“நான் பிறந்தது கரிசல் நாடு. என் அன்னையின் பெயர் பருத்திச் செடி. என் அன்னையை விவசாயி அருமை பெருமையுடன் போற்றிவளர்த்தான். அவள் செழித்து வளர்ந்தாள். என் அன்னை பருவம் அடைந்தாள், இன்பம் கண்டாள், என்னை ஈன்ருள், மகிழ்ச்சி அடைந்தாள், பஞ்சு என்று பெயரிட்டாள். என் தந்தைக்குச் சமமான விவசாயி கண்ணுங்கருத்துமாகக் காப்பாற்றினன். தந்தை உரம் இட்டு வளர்த்தான். தாய் உணவூட்டி வளர்த்தாள். காற்று தாலாட்டியது. வண்டினம் கீதம் பாடியது. என்னே இன்பம்! இந்தச்சுகம் என்றும் இருக்குமென எண்ணினேன். ஆனல் ஆனல்”..........

நான் :—ஆனல் என்ன ஆயிற்று?

நூல் :—“நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பதை மறந்திருந்தேன். நான் பழுத்துப் பக்குவமானவுடன் விவசாயி என்னை என் அன்னையிடமிருந்து பிரித்து விட்டான். மற்ருெருவனிடமும் விற்றுவிட்டான். இதிலிருந்துதான் என் கஷ்டம் ஆரம்பமாயிற்று. பிறகு எப்படியோ ஒரு கட்டிடத்தை, அதோ உனக்கு எதிரில் இருக்கிறதே அந்தக் கட்டிடத்தை அடைந்தேன்.

ஒரு பெண் என்னைச் சுத்தப்படுத்துகின்றேன் என்று என் உடலிலுள்ள சில பாகங்களைப் பிய்த்து எறிந்தாள். இது போதாதென்று திரிமணையில் என்னை வைத்து, அரைத்து, என் உடலைக் கசக்கி, என் உடன் பிறந்தோராகிய விதைகளை என்னிடமிருந்து பிரித்துவிட்டாள். உடன் பிறந்தோரைப பிரிந்ததாலும், மணையில் அதிகமாக அரைப்பட்டதாலும் என் உடலும் உள்ளமும மிகமிக நொந்தது. அவளிடமிருந்து தப்பிப்போக சிலசமயம் சிதறிப்போனேன். அவள் அப்போதும் என்னை விடவில்லை. இது என்ன சனியன் என்று என்னைப் பழித்தாள். எடுத்து வைத்து மறுபடியும் அரைத்தாள். மனிதவர்க்கமே கொடுமையின் உருவம்தானே என்றுகூட எண்ணினேன. இதற்குப் பிறகு இரண்டுநாட்கள் கஷ்டமில்லாமல் இருந்தேன். மறுபடியும் என் கஷ்டம் தொடர்ந்தது. அதே பெண் என்னை வில்லால் அடித்துப புண்படுத்தினள். அணுஅணுவாகப் பிரித்துவிட்டாள். நான் நிலை

குலைந்து விட்டேன். ஆனால் சிறிது வெண்மை நிறமாக மாறினேன். குச்சியை உபயோகித்து எனக்கு வேறொரு நீண்ட உருவம் தந்தாள். பட்டை என்று பெயரிட்டாள். என்னுடன் இன்னும் அநேகப பட்டைகள் இருப்பதையும் கண்டேன். ஆனால் நாங்கள் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ளும் திறமையை இழந்திருந்தோம். சில நாட்களுக்குப்பிறகு இந்தக் கொடுமைகள் போதாதென்று மறுபடியும் சித்திரவதை செய்து என்னை முறுக்கி மெல்லிய நூலாக நூற்றாள். நான் அவள் கொடுமைக்குப் பயந்து பிரிந்தோ அல்லது ஓடிப்போகும் சமயமோ என்னை இழுத்து வைத்து முடிச்சுப் போட்டாள். பிறகு கட்டாகக் கட்டினாள். இந்த மனிதவர்க்கம் சுயநலத்துக்காக இழைக்கும் துன்பம்தான் எவ்வளவு? சொல்லி முடியாது. இவ்வாறு அருமையாக வளர்ந்து, அன்னையைப் பிரிந்து, அந்நியனுக்கு விற்கப்பட்டு, பெண்ணிடம் அடிபட்டு, எலும்பு நுறுங்கி, உடன்பிறந்தோரைப் பிரிந்து, வேறு உருவத்தையும் பெயரையும் பெற்று, அணுஅணுவாக உடலும் உள்ளமும் கஷ்டப்பட்டு, கட்டுண்டு இந்த நிலையில் இப்போது இருக்கிறேன்.

இப்பொழுதும் அவள் என்னைச் சும்மாவிடவில்லை. தறியில் வைத்துத் துணியாக நெய்யப் போகிறாளாம். அதனால் எங்கேயோ என்னை எடுத்துக் கொண்டு போகிறாள். வருங்கால கஷ்டங்களை அனுபவிக்க மனமில்லாமல், என் துன்பத்திற்கு முற்றுபுள்ளி வைத்துக்கொள்வதற்கு நான் மெதுவாக அவளிடமிருந்து நழுவி விட்டேன். நல்ல வேளையாக அவளும் என்னைப்பார்க்கவில்லை " என்றது.

அதன் வரலாற்றைக் கேட்டு உள்ளம் உருகினேன். இன்னது சொல்வது என்று தெரியாமல் வாளாவிருந்தேன்.

நூல் :—என் கஷ்டத்திற்கு முடிவு காலம் உண்டா?

நான் :—உன் கஷ்டத்திற்கு முடிவு காலம் வந்துவிட்டது. மிகக்கடுமையான கஷ்டங்களையெல்லாம் முன்னமேயே அனுபவித்துவிட்டாய். இனி நீ செய்யப்போவது ஒரு பெரிய தியாகம். பாரதமக்களின் மானத்தையும உடலையும் அல்லவா காப்பாற்றப்போகிறாய்?

நூல் :—என்றால் தியாகம் செய்ய முடியுமானால் என்னைத் தயவுசெய்து அந்தப் பெண்ணிடம் சேர்த்துவிடு. என் உயிரைக் கொடுத்தேனும் மற்றொருவருக்கு நன்மை செய்வேன்.

பிறகு நான் அந்தப் பெண்ணிடம் அந்த நூலைச் சேர்த்துவிட்டேன். அது வணக்கம் கூறியது. அவள் நன்றி கூறினாள். துணியாக நெய்யப்பட்ட பிறகு 'துண்டு' என்று பெயர்பெற்று அது விற்பனைக்கு வந்தது. அப்போது நானும் அங்கு இருந்தேன். அது என்னைப் பார்த்து புன்னகை பூத்தது. ஓர் ஏழை விவசாயி அதை வாங்கி மகிழ்ச்சியோடு அணிந்து கொண்டான். "பாரத ஏழை மகனின் உடலுக்குப் பணிசெய்து கிடப்பதே என்கடன். அவன் என் காப்பாளன், எத்தனைத் துன்பம் வரினும் ஏற்றுக் கொள்வேன். என் உயிரையும் தியாகம் செய்யச் சிறிதும் தயங்கமாட்டேன்" என்று ஆனந்தத்தோடு என்னிடம் உரைப்பதுபோல் இருந்தது அது காற்றில் படபடவென்று அடித்து ஆனந்தக் கூத்தாடிய அந்தக்காட்சி. மறுபடியும் விவசாயி அதற்கு அபயம் அளிப்பது போல் நன்றாக இழுத்திபோர்த்திக் கொண்டான். அதுவும் அவன் உடலை ஸ்பரிசித்து உடலோடு ஒட்டிக்கொண்டது.

ஆனால் அந்தத் துணியின் ஒருமுனை மாத்திரம் எனக்குப் பிரிவு உபசாரமும் வணக்கமும் தெரிவித்துக் கொள்வதுபோல் சில விநாடிகள் உயர ஓங்கிப் பறந்தது. நான அதற்கு வாழ்த்துக் கூறினேன். விவசாயி துணிசகிதம் நடந்தான். நான் கண் கொட்டாமல் துணியின பெருந்தன்மையையும் தியாகத்தையும் பார்த்து வியந்து கொண்டிருந்தேன். அந்த விவசாயியும் 'கிராமத்துச் சிந்துப் பாட்டைப்' பாடிக் கொண்டே நடந்து கொண்டிருந்தான். அந்தக் கீதத்தின் நாதம் காற்றலைகளில் நீந்திப் பரவியது.

பொ. ஜெயலக்ஷ்மி, ஐந்தாம் படிவம் 'ஆ' பிரிவு.

ஷேக்ஸ்பியர்

